2021 செப்டம்பர் 2] [திரு. மா. சுப்பிரமணியன்]

வகைகளை அதிகமாக எடுத்துக்கொள்வதை படிப்படியாகக் குறைக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 'சற்றே குறைப்போம்' என்ற திட்டத்தின்மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

71. விடுதிகள், விழா காலங்களில் உபரி உணவை வீணாக்காமல் பயன்படுத்த பரீட்சார்த்த ரீதியாக 10 மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்படும்.

நட்சத்திர விடுதிகளிலும், விழா காலங்களிலும், பயன்படுத்த உகந்த அதிகப்படியான உணவு, வீணாவதைத் தவிர்க்கும் விதமாக தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, வீணாகக்கூடிய உபரி உணவை–உணவை நாடுகின்ற எளியோருக்கு சேர்க்கும் திட்டம், முதல் கட்டமாக 10 மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் ஊக்கப்படுத்தப்படும்.

72. உபயோகித்த சமையல் எண்ணெயின் மறு பயன்பாட்டைத் தடுக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, அதிலிருந்து பயோ – டீசல் உற்பத்தி செய்வது உறுதிப்படுத்தப்படும்.

ஒருமுறை உபயோகித்த சமையல் எண்ணெயை மீண்டும், மீண்டும் உபயோகிப்பது உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம். நீரிழிவு நோய், குடல் அழற்சி, மஞ்சள் காமாலை போன்ற பல்வேறு நோய்களுக்குக் காரணமாகிறது. ஒரு முறை உபயோகித்த எண்ணெயை மீண்டும் உணவு தயாரிக்கப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், மறுபயன்பாடு செய்திட ஏதுவாக உணவகங்கள் மற்றும் துரித உணவு உற்பத்தியாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். ஒரு முறை உபயோகித்த சமையல் எண்ணெயைச் சேகரித்து அதிலிருந்து பயோ–டீசல் உற்பத்தி செய்வது உறுதிப்படுத்தப்படும்.

73. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2022 ஜனவரி முதல் மேலும் ஐந்தாண்டுகளுக்கு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். இதற்கென நடப்பாண்டில் ரூபாய் 1,248.29 கோடி செலவிடப்படும்.

தற்போது செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் வரும் ஜனவரி 2022 இல் முடிவு பெறுகிறது. அது தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலும் அதிக சிகிச்சை முறைகளுடன், பொதுத் துறை காப்பீட்டு நிறுவனத்தின்மூலம், ஏழை எளிய திட்டப் பயனாளிகள் அதிகபட்சம்

[திரு. மா. சுப்பிரமணியன்] [2021 செப்டம்பர் 2 ஆண்டு ஒன்றுக்கு குடும்பத்திற்கு ரூபாய் 5 இலட்சம் வரையில் கட்டணமில்லா சிகிச்சைபெறும் வகையில் செயல்படுத்தப்படும். இதற்கென நடப்பாண்டில் ரூபாய் 1,248.29 கோடி செலவிடப்படும்.

74. மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியும் மற்றும் சிகிச்சைக் கருவிகள் ரூபாய் 6.98 கோடி செலவில் வழங்கப்படும்.

பெண்களிடையே மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் பாதிப்பு மற்றும் இறப்பு விகிதம் மிக அதிகமாக உள்ளது. இதனை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதன்மூலம் உரிய சிகிச்சை முறையைத் துவங்கலாம். இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மார்பகப் புற்றுநோய் கண்டறியும் மேமோகிராம் (Mammogram) கருவிகளும், 35 அரசு வட்டார மருத்துவமனைகள் மற்றும் 3 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு தெர்மோகொயாகுலேட்டர் கருவிகளும், 176 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், 12 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 12 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு செமிஆட்டோ அனலைசர் கருவிகளும் ரூபாய் 6.98 கோடி செலவில் வழங்கப்படும்.

75. "கர்ப்பகால பரிசோதனைப் பெட்டகம்" அரியலூர், இராமநாதபுரம் உள்ளிட்ட 10 முன்னுரிமை மாவட்டங்களில் உள்ள 2,249 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 2.59 கோடி செலவில் வழங்கப்படும்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதன் காரணமாக வரும் வலிப்பு நோயினை ஆரம்ப நிலையிலேயே தடுக்கவும் மற்றும் குழந்தையின் இருதயத் துடிப்பினைக் கண்டறியவும் டிஜிட்டல் இரத்த அழுத்தக் கருவி, எடை பார்க்கும் கருவி மற்றும் இருதயத் துடிப்பு கண்டறியும் கருவி ஆகியவைகள் அடங்கிய கர்ப்பகால பரிசோதனைப் பெட்டகம் ரூபாய் 2.59 கோடி செலவில் முன்னுரிமை மாவட்டங்களான அரியலூர், இராமநாதபுரம், தேனி, திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி, நீலகிரி, தருமபுரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள 2,249 துணை சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்படும்.